
# ஆத்மஜோதி



என்னை எனக்கறிவித்தான்
எங்கள் குருநாதன்.

—யோகர் சுவாமிகள்.

சாதாரண ௵ பங்குனி ௴ 1ம் ௳ (15-3-71)




ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 23 - சாதாரண ஸ்ரீ - பங்குனி மீ 1ம௳ [15-3-71] - சுடர் - 5


# பொருளடக்கம்


| | |
|---|---|
| தியானம் | 113 |
| தியானம் என்பது இன்னதெனல் | 114 |
| தியானம் | 115 |
| மா மருந்தைப் பணிமின் | 117 |
| அமைதி எங்கே கிடைக்கிறது . ? | 118 |
| சிவப்பிரகாசர் அருளிய பொன்மொழிகள் | 120 |
| உள்ளறிவு | 123 |
| க்ஷீர் பவானி | 126 |
| இயற்கையே சோதிடம் 12 | 130 |
| என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதன் | 135 |
| அக்கமாதேவியின் அநுபவநிலை | 142 |
| வசவண்ணர் வழி | 143 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்




ஆயுள்சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# தியானம்

எதனிடம் பக்தி செலுத்துகிறேமோ அதைத்தவிர வேறு எதையும் மனத்தால் பார்க்கவோ கேட்கவோ முடியாத படி மனத்தின் கண்களையும் காதுகளையும் மூடிக்கொள்வதே உண்மையான தியானமாகும். ஆதலால் பிரார்த்தனை சமயத்தில் கண்களை மூடிக்கொள்வது லட்சியத்தினிடத்தில் சிந்தனையைக் குவித்து வைப்பதற்கான ஓர் உதவியாகும்.

—காந்தி

**
**

மௌனமாய்த் தியானித்தால் மனம் கலங்காத நிலை பெறும். தியானத்தின் மூலம் சிந்தையைத் தூய்மை செய்பவன் துன்பக்கடலைக் கடக்கும் கப்பல் ஆவான்.

—ஜைனமதம்

**
**

சத் சித் ஆனந்த வடிவினனான கடவுள் ஒருவர் இருக்கிறார் எனப் பூவுலகப் பெருமதங்கள் எல்லாம் ஒரே குரலில் பறைசாற்றுகின்றன. இவ்வுயரிய கடவுள் உங்களிலிருந்து அப்பாற்பட்டவர் அல்லர் என்று கூறும் என்னை நம்புங்கள். அவர் உங்களுக்கு வெகு அருகிலேயே இருக்கிறார். அவர் உங்களது சரீரக் கோவிலில், இதயக்குகையினுள் வாசஞ் செய்கிறார். உங்கள் மனத்தின் மௌன சாட்சியாக விளங்கும் அவர் உங்களின் அறிவுத்துறை வேலைகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார். மறைநூல்கள் தெரிவிக்கும் மிக உயரிய சக்தி அவர்தான். முனிவர்கள், துறவிகள், யோகிகள், வேதாந்திகள், தீர்க்கதரிசிகள் அனைவராலும் போற்றப்படும் கடவுளை யோகப் பயிற்சியின் மூலமே அதாவது தியானத்தின் மூலமே நீங்கள் உணரமுடியும்.

—சுவாமிசிவானந்தர்

# தியானம் என்பது இன்னதெனல்

## (சுவாமி நடராஜன்)

தெய்வீக சக்திகளைப்பற்றிப் பன்முறை மனமுருக நினைக்கச் செய்து, ஏகாக்கிர சித்தத்தை அடையச்செய்து, சித்தம்பலம் பெறச்செய்து, ஆத்மீக சக்திகளை அடையச் செய்து, ஆனந்தராகவும் ஜெயசித்தராகவும் ஆக்குவதற்கு எந்த நெறிக்குத் திறமுண்டோ அந்த நெறிக்குத் தியானம் என்று பெயர்.

★★

தன்னிடத்தில் எந்தத் தேவாம்சமான சக்தி உண்டோ அதைநோக்கி ஆழ்ந்து சிந்தித்து மற்றைய நினைவுகளை நீக்கி தேவாம்சமான சக்தியையும், தெய்வீக சுகத்தையும்தான் அடைவதற்குத் துணைபுரியும் எந்த நெறியுண்டோ, அந்த நெறியில் நிற்பதையே தியானம் என்பர்.

★★

உயிர், உடல், மனம் முதலான கருவி கரணங்கள் அனைத்தையும் நல்ல நிலையில் அமைத்து கெடாது நிறுத்த வல்லது தியானமாகும்.

★★

கடவுள் வணக்கம் அல்லது தியானம் என்பது மனத்தி லுள்ள சுமையை, கவலையை, கஷ்டத்தை நீக்கி, சிற்சுகத் தை அடையச்செய்து, மனதைச் சுகநிலையில் அமைப்பது.

நித்திரை சுகம், உலக சுகம் அனைத்தினும் மேலான தெய்வீகசுகத்தைத்தருவது எதுவோ அதுவே தியானம்.

★★

# தியானம்

( ஆசிரியர் )

இறைவனைப் பற்றிய தொடர்ந்த சிந்தனைப் பெருக்கிற்கே தியானம் என்று சொல்லப்படும். உயரமான ஒரு இடத்திலிருந்து எண்ணெயை ஒழுக விட்டால் அது கம்பி போன்று இடையறாது ஒழுகிக் கொண்டே இருக்கும். அது போன்று மனமும் இடையறாது இறைவனது தியானத்தில் ஈடுபடுமானால் இறைவன் சிந்தையில் உறைகின்றார். இத்தகைய ஒருநிலை ஏற்படுவதற்குப் பல வகையான சாதனைகள் புரிய வேண்டும். பல பிறவிகளில் செய்த மனப்பயிற்சி காரணமாகவோ அன்றி மகான்களின் ஆசிகளினாலோ தான் இது ஒருவனுக்குச் சித்திக்கின்றது.

தைலதாரை போன்று கடவுளின் எண்ணத்தை யோகிகள் 'தியானம்' என்பர். ஞானிகள் 'நிதித்தியாசனம்' என்பர். பக்தர்கள் 'பஜனை' என்கின்றனர். 'தியானமே எனது மனம்' என்பது பழைய ஒருபாடல். கடவுளின் திருவருளைப் பெறுவதற்குத் தியானம் செய்ய வேண்டுவது அவசியமாகின்றது. தியான சித்தி பெறுவதற்கு ஏகாக்கிர நிலை அல்லது மன ஒருமை அடைய வேண்டியது இன்றியமையாததோர் பெரிய காரியமாகின்றது.

மன ஒருமை நாம் நினைப்பது போல் இலகுவில் கைகூடி விடுவதில்லை. வாழ் நாள் முழுவதும் இடை விடாது அதற்காக உழைக்க வேண்டும். கரணங்கள் நான்கும் ஏனைய தத்துவங்களும் வீணான விஷயங்களிற் சென்று மயங்கி மயக்கத்தைத் தருவதற்கு இடம் கொடுக்காமல் அவற்றைத் தம் வயப்படுத்த வேண்டி உள்ளது.

மனதைத் தம் வசமாக்கிக் கொண்டு ஒருமையை அடைந்து தியானசித்திபெறுவதற்கு அனேக முறைகளுண்டு. அந்தந்த முறைகளுக்குத் தகுந்த பயன்களும் அநேகமுண்டு,

அதிகாலை 4மணி தொடக்கம் 6மணி வரை பிரம முகூர்த் தமாகும். இந்த நேரமே தியானத்திற்கு மிக ஏற்றதாகும். படுக்கைக்குச் செல்லுமுன் தியானத்திற்கு அமரலாம். அந்த நேரம் மிக அமைதியானதாகும். இயன்றளவு நேரம் தியா னத்தில் அமருக. அதே தியானத்துடன் நித்திரைக்குச் செல்லுக. பழக்கப் படுத்திக் கொண்டால் இரவு முழுவதுமே தியானமாக மாறி விடும். காலையிலும் எளிதில் தியானம் கைகூடி விடுகின்றது. பகலில் வேலை செய்யும் போது அடி மனது தியானத்தில் ஈடு பட்டு விடுகின்றது. வாழ்க்கை முழு வதும் தியானமாகிவிடுகின்றது. இந்த நிலை ஒருவனுக்கு ஏற் பட்டு விடுமானால் இதனிலும் பெரிய இன்பம் வேறு இல்லை யென்றே கூறலாம்.

வாரத்தில் ஒரு நாள் எல்லாருக்கும் பூரண ஓய்வு கிடைக்கிறது. அத்தினத்தை சத்சங்கத்திலும் திருத்தல வழிபாட்டிலும் தியானத்திலும் கழித்தால் அவ்வாரம் முழுமைக்கும் வேண்டிய சக்தியை நாம் பெற்றுக் கொள்ள லாம். ஓய்வு நாட்களில் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஓய்வு கொடுக்க வேண்டும். அதை விடுத்து அன்றைய தினத்திலே தான் பலர் உள்ளத்தை நரகக் காடாக்கும் விஷயங்களில் ஈடுபட்டு கெட்டழிந்து போகின்றனர்.

தனிமையும் தீவிர தியானமும் ஆத்மானுபூதிக்கான இருமுக்கிய தேவைகள். இயற்கை அழகு பொலியும் இடம், அழகிய பூந்தோட்டம், புனித தலங்கள், மகான்களுடைய ஆச்சிரமங்கள் தியான சித்தி பெறுவதற்கு ஏற்ற இடங்களா கும். இத்தகைய சூழலோடு திருவருளும் குருவருளும் ஒருவ னுக்குக் கிடைக்கப் பெறுமானால் தியான சித்தி மிக இலகு வில் ஏற்பட்டு சமாதி நிலைக்கு வழிவகுத்து விடுகின்றது.

★★

# மா மருந்தைப் பணிமின்

- திருமதி. பா. நல்லதம்பி -

காணும் கண்ணிற் கண்டவரே
களிப்பவர் மனதில் கலப்பவரே
பேணும் அடியவர் முன்னிலையில்
பேசாது வந்து நிற்பவரே.

★★

தேசும் புகழும் நீத்தவரே
தேவரு மறியா மறையவரே
காசும் களிப்பும் கருதுவோர்பால்
கடுமொழி பகர்ந்து வந்தவரே.

★★

நீயும் நானும் அற்றவரே
நிலையுணர்ந்தே முன் பகர்பவரே
மாசும் மறுவும் அற்றவரே
மனித உடலில் வந்தவரே.

★★

சிறந்த நல்லைத் தேரடியார்
செல்லப்பன் சேவடி பதிந்தவரே
மறைந்தும் மறையாப் பொருளாகி
மா மருந்தாகி மறைகின்றூர்.

★★

குருவும் தானும் ஒன்ருக
கூடி வந்தும் மருந்தாவார்
பாரறியாக் குரு பெற்ருரே
பணிமின் பணிமின் யோகரென்றே.

★★

# அமைதி எங்கே கிடைக்கிறது..?

செல்வி: நோ. இராசம்மா,

★—★—★

இப் பிரபஞ்சத்தில் வாழும் கோடானு கோடி உயிர் அணுக்கள் யாவும் பகலெல்லாம் ஓடியாடித்திரிந்து இரவில் உறங்குகின்றன. நித்திரை கொள்ளும் நேரந்தான் அமைதி கிடைக்கும் நேரமா....? அப்படியாயின் நித்திரை கொள்ளும் வேளையில் எல்லோரும் தன்னை மறந்து நித்திராதேவியோடு சங்கமமாகி விடுகின்றார்களா.....? அதுதான் இல்லை. உடற்சோர்வு நீங்க உடல்தரையில் கிடக்க உள்ளங்கள் அமைதியற்றுத் தவிப்பவை எத்தனை .... எத்தனை .....? உடலும் உள்ளமும் உறங்காமல் விழித்திருப்பவை எத்தனை ....? கயவர்கள், திருடர்கள், காமுகர்கள், சதித்திட்டம் தீட்டுபவர்கள் எல்லோர்க்கும் உற்ற துணை இரவின் அணைப்பே! இந்த இரவு எத்தனை கொலைகளை, படுபாதகச் செயல்களைச் செய்யத் துணை நிற்கிறது.

அமைதியின்றித் தவிக்கும் உள்ளங்கள் மேலும் மேலும் அமைதியின்றித் தவிப்பது இரவின் கொடுமைதான்! இருள் என்பதே கொடிய வாழ்வு, ஒளியற்ற வாழ்வு என்றுதான் அர்த்தம்....? உலக ஆசாபாசங்கட்குட்பட்ட மானுட ஜன்மங்களுக்குத்தான் இருட்டின் கொடுமையும், பகலின் வெப்பமும் வெளிச்சமும் விகற்பமாகத் தோன்றுகின்றன. ஆனுல் உள்ளொளி கண்ட ஞானியர்க்கு மட்டும் இரவும் ஒன்றுதான்! பகலும் ஒன்றுதான்! குளிரும் ஒன்றுதான்! வெப்பமும் ஒன்றுதான்! அவர்கள் உள்ளம் அகக்கண்ணுல் சோதி வடிவைக் கண்ட இன்பத்தில் சதா அமைதி கொண்டிருக்கும். அந்த அமைதி அந்த சாந்தம் இன்ப வாழ்வு எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதே அவர்கள் பிரார்த்தனை குறிக்கோள் எல்லாம்.

இறைவனின் திருவடிகளை வணங்கும் போது ஏற்படுகின்ற அந்த அமைதி எந்தவொரு மகிழ்ச்சியாலும் தர முடியாத அமைதி! இறைவனின் சிவதலத்துக்குச் சென்று இன்னிசை எழுப்பும் நேரத்தில் உண்டாகும் அமைதி, எந்தவொரு இசை நிகழ்ச்சியைக் கேட்கும் பொழுதும் ஏற்படுவதில்லை. இவை யெல்லாவற்றையும் விட எம் உள்ளக் குமுறலை யெல்லாம் எம்பெருமானிடம் உரைக்கும் பொழுது எம் உள்ளத்தில் உவகை பொங்கிக் கண் வழியாக ஆனந்தம் பெருக்கெடுத்தோடுகிறதே! அந்தக் கண்ணீரை இறைவனுக்குக் காணிக்கையாக அர்ப்பணம் செய்யும் போது உண்டாகின்ற அமைதி! இதுவே ஆத்மா அடையும் நிறைவான அமைதி! அமைதி கிடைக்குதில்லையே என்று கடற்கரைக்கும், சினிமாவுக்கும், களியாட்ட நிகழ்ச்சிகளுக்கும் செல்லும் வகையினர்தாம் எத்தனை! மது போதையில், சூதாட்டத்தில் நினைவிழந்து கிடப்பவர்தாம் எத்தனை....?

உள்ளத்தில் புனிதம், செய்கையில் பண்பு, வாழ்க்கையில் தர்மம், குணத்தில் அன்பு இவைகளை அணிகலன்களாகக் கொண்டு வாழ்ந்தால் குறைவினில் நிறைவு காணலாம். துன்பத்தில் இன்பம் காணலாம். அந்த நிறைவினில் அமைதி காணலாம்.

> ''பிரதிபலன் எதிர்பாராது மனித தர்மத்துக்காக எவன் பாடுபடுகின்றானோ அவனே உண்மையான தொண்டனாவான்!''

---

சத்தியத்தைத் தேடிச் செல்பவன் தன்னைப்பற்றி நினைப்பவனாக இருக்க முடியாது. பிறருக்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்ய வேண்டியவன் சத்திய உபாஸகன். தனக்கெனமட்டும் இந்தப் புவியில் எதையோ ஒன்றைத் தேடிக் கொள்வதற்கு அவனுக்கு அவகாசமே இராது.

— காந்தி.

# சிவப்பிரகாசர் அருளிய பொன்மொழிகள்

1. திரிபுவனுதிபதியாகிய சிவலிங்கமூர்த்தியை யார் பூசித்தாலும் அவர்களுக்கு கல்வி, செல்வம், பக்தி, ஞானம் முதலியவைகள் உண்டாகப்பெற்று இகவாழ்வில் சுகபோகத்தை அனுபவித்து இறுதியில் சாயுச்சிய பதவியாகிய சிவலிங்க ஐக்கியமாகிருர்கள்.

2. எண்ணற்கரிய தானங்கள், விரதங்கள், யாகங்கள் செய்யும் பலன்களைவிட சிவ வழிபாடாகிய தவப் பலன் அளவிடற்கரியது.

3. உதயம், உச்சி, அந்தி ஆகிய முக்காலமும் ஆத்ம லிங்கத்தை கரபீடத்திலிருத்தி பக்தியோடு வழிபாடு செய்ய பிறவித்துயருக்குக் காரணமாகிய அனந்த பாபங்கள் நசித்துப் பரம்பொருளாகிய என்னில் ஈரறக்கலக்க அருள் புரிவேன் என்பது குரு அல்லமப் பிரபுவின் அருள் வாக்கு.

4. தினம் இரண்டு வேளையாவது சிவ வழிபாடு செய்த பிரசாத உணவை ஏற்றுக் கொள்ளாது தன் வயிற்றைமட்டும் நிரப்பிக் கொள்ளுகிறவர்கள் பிறப் பிறப்பென்னும் பிணிவாய்ப் பட்டு மீளாத் துயர்க்குள்ளாவார்கள்.

5. உள்ளங்கையிலெழுந்தருளிய தனது இட்டலிங்கத்தை புறக்கணித்து அந்நிய தேவதைகளை வழிபடுபவர்கள் கங்காநதியை விட்டு உப்புக் கடலில் மூழ்குவாரைப் போலுமாம்.

6. எமது தலைவனுகிய பரமசிவனது வழிபாட்டினுல் அட்டமாசித்திகளையும், மேன்மை பொருந்திய வாழ்வையுங் காமியங்களில் விருப்பமுடையவர்களும், அக்காமியத்தை விரும்பாதவர்கள் மோட்சத்தைப் பெறுவார்கள். இது சத்தியம்.

7. கிடைத்தற்கரிய மனிதப் பிறவி கிடைத்தும், வாசனை நிரம்பிய புட்பங்களாலும் வில்வதளத்தினாலும் சிரத்தையுடன் சிவலிங்கத்தை வழிபடாராகில், பெருமை பொருந்திய தங்களாயுளை யெல்லாம் பாழுக்கிறைப்பவர்களாகிய மூடர்களை யெண்ணுமிடத்து பரிதாபகரமாக இருக்கிறது.

8. ஒப்பில்லாத சிவாகமங்களில் சொல்லிய மந்திரங்களையுங் கிரியைகளையுங் குற்றமற உபதேசிக்கும் அருளையுடைய நல்ல ஆசிரியன் அனுக்கிரகத்தினால் பெற்றுக்கொண்டு பூஜை செய்கின்றவர்கள் மேலாகிய சிவ வழிபாட்டினது பயனையடைவார்கள்.

9. பரமசிவனது ஐம்முகங்களுந்தந்த ஆகமத்தில் பொருந்திய விதிப்படி தவறாது செய்யினும் அன்பானது உள்ளத்திலில்லையாயின் சிவ வழிபாடானது பலன் தராது.

10. அருளென்னும் நீரையாட்டி யபிடேகஞ் செய்து சாந்தமெனும் சந்தனந் தரிப்பித்து ஐம்புலனொடுக்க மென்னும் வாசனைமலரை யர்ச்சித்து தனதறிவாகிய நைவேத்தியத்தை பரமனுக்கு அருந்தச் செய்தலே சிவ பக்தனது இலட்சணமாகும்.

11. குற்றமற்ற மனதில் எழுகின்ற அன்பையல்லாமல் பரமசிவனது பூஜையை விரும்பி என்ன பயன் ஏற்படப் போகிறது. ஊஞ்சலைப் போலலைகிற மனமுடைய வொருவன் அபிடேகம் செய்யும் நீரானது கங்கையருகிலிருக்கின்ற லிங்கத்தில் மோதுகின்ற அலைக்குச் சமமே யல்லாது மேலானதன்று.

இறைவனைப் பூசை செய்யா ரிருவிழி யிழந்தாராவார்
உரைபுகாச் செவிடராவா னுருவிலா னிலிங்கந்தன்னை
புரையற மலர்கடுவிப் போற்று மிவ்விதியா மென்று
நறுமலர்த்தாரான் நந்தி நன்முனிக்கருளிச் செய்தார்.

( தேசிகநியமம் )

சிவன்ராத்திரி, வைகுண்ட ஏகாதசி, போன்ற விசேஷ நாட்களில் உபவாசமிருந்து இரவு முழுதும் விழித்திருந்து கடவுள் வழிபாட்டில் செலவிட வேண்டும் என்பது நமது சாஸ்திரங்களின் கட்டளையாகும். ஆனல் இன்று கடவுள்வழிபாட்டை விட்டுவிட்டு சீட்டாடுதல், சொக்கட்டான் ஆடுதல், சினிமா பார்த்தல் இத்தகைய பொழுதுபோக்குகளில் இரவைக் கழித்து விழித்திருக்கிறர்கள். அறிவீனன் பலவீனன் எப்பொழுதும் எத்தகைய புனிதமான சம்பிரதாயங்களையும் இங்ஙனம் மாசுபடுத்தி விடுகிறன் என்பதற்கு இவைகள் சான்றகும். மத சம்பிரதாயங்கள் பல இங்ஙனம் அர்த்தமற்ற சமயப் பழக்கங்கள் ஆகிவிட்டன.

— சுவாமி சித்பவாநந்தா


## இமாலயன் பற்பொடி

ஒரு ரின் விலை ரூபா 1.

கிடைக்குமிடம்: ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி.

## கூட்டுவழிபாடு

— வெளிவந்து விட்டது —

(புதியபதிப்பு) விலை சதம் 50.

கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி.


★★
★

# உள்ளறிவு

( எஸ். ஆர். ஜெயவேலு )

மனிதன் என்று சொல்லும்போதே மனதைத் தன் வசப்படுத்தி, அதைக்கொண்டு அரிய சாதனைகள் புரியக் கூடியவன் என்பதே பொருள். இந்த மனதின் தன்மை யாது என்பதைப் பார்ப்போம். மனம் புறக்கரணங்கள் வாயிலாக ப்ரபஞ்சத்தைப் பார்க்கும், கேட்கும், முகரும் சுவைக்கும், ஸ்பர்ஸ உணர்வு பெறும். இப்படி கிடைத்த அநுபவங்களைச் சித்தத்தில் பதித்து பின்னர், ஒரு கால் அவற்றை நினைக்கும், இவையன்றிச் சில பொருள்கள் விஷயங்கள் பற்றி பிறர் சொல்லக் கேட்டோ, அல்லது புத்தகங்களில் படித்தோ அவை பற்றி தம் முன் அனுபவங்கள் கற்பனை முதலிய வற்றைக் கொண்டு உருவகப்படுத்தும். இவைகளை வகைப்படுத்தினால் 1. புறக்கரணங்கள் வாயிலாக நேராக அனுபவித்து உணர்வது ப்ரத்யக்ஷப்ரமாணம்; 2. சித்தத்தில் பதித்து வைத்துள்ள வற்றை ஞாபகப்படுத்தி உணர்வது சித்தப்ரமாணம், 3. ஏற்கனவே உணர்ந்தவற்றைக் கொண்டு, கேட்ட, படித்த வற்றைக் கற்பனைச் செய்து உணர முயல்வது அநுமானப்ரமாணம் 4. மற்றும் வேதாகமங்களில் கூறப்பட்டுள்ளவற்றை ஏற்கனவேஉணர்ந்தவைகளோடு ஒப்பிட்டு உணரமுயல்வது ஆகமப்ரமாணம் எனப் பிரிக்கலாம்.

இங்கே, புறக்கரணங்கள்சித்தம், மனம், பிறர்வாய்மொழி புத்தகங்கள், ஆகமங்கள் — இவை அனைத்தும் அறிவென வழக்கியலில் கூறப் பெறும் புலன் விகிதமுறை உதவும் உபகரணங்களாம்.

இனி இந்த உப கருவிகள் அனைத்தையும் எல்லா மனிதர்களும் உபயோகிப்பதில்லை. பெரும்பாலான மனிதர்கள் தம் பஞ்சக்கரணங்கள் வாயிலாக மனவியக்கம் பெற்று லௌகிக ஞானம் மட்டும் பெறுகின்றனர். லௌகிக ஞானத்தையே சித்தத்திலும் பதித்து அவ்வப்போது ஞாபகத்துக்குக்கொண்டு வருகின்றனர். ஆனால், சிலரோஇந்த லௌகிக ஞானத்தைக் கொண்டே பல புது உண்மைகளைக் கல்வி

கேள்விகள் வாயிலாகப் படித்தும், கேட்டும் அநுமான ஆகமப்ரமாணங்களைக் கொண்டும் பெறுகின்றனர். இதற்கு உறுதுணையாக நிற்பன ஏகாக்ரஹம் போன்ற முறைகளி லும் வேதாகமங்களில் பயிற்சியுமாம். அவரவர்களின் கர்ம பலன், பரிணும பக்குவங்களுக்கு ஏற்ப வெறும் லோகாய தனுகவோ, அன்றி மேற்கூறிய பயிற்சிகளின் பலனுய் புது உண்மைகளை, புது ஞானத்தைப் பெறும் பக்குவமுறுகின்ற வனுகவோ ஆகின்றனர். சாதகமான கர்ம பலன் மட்டுமோ அல்லது பக்குவ நிலைக்குத் தன்னை பயிற்சிகள் வாயிலாகப் பண்படுத்திக் கொண்டால் மட்டுமோ, புது ஞானங்களைப் பெறலரிது. உண்மையில் இவை இரண்டும் இணைந்திருக்க வேண்டும்.


மேற்கூறியவற்றுள் சித்தத்திலிருந்து பிறக்கும் ஞான மும் இப்பிறவியின் வாயிலாகப் பெறப்பெற்றவையாகவே இல்லாமல் பூர்வஜாதி ஞானமும் கைகூட ஏதுவாகலாம். இஃது, புறத்தே லௌகிகத்தில் ஓடித்திரியும் மனதை நிலை நிறுத்தி சித்தத்தை விழிப்புறச் செயின் சித்திக்கக் கூடியது.

இனி மேற்கூறிய வகைகளாலன்றி தான் இதுவரை அநு பவித்தறியாத சித்தத்தில் (இப்பிறப்பிலோ, முற்பிறவிகளி லோ) பதியாத புது ஞானம் பிறக்கவும் கூடும். எப்படி என்பதைக்காண்போம்நம்முடையமனம்,சித்தம்அறிவுஇவற் றிற்கு ஆதாரம் இறைவனது மனம், சித்தம், அறிவேயா கும். ''என்அறிவினுக்குஅறிவாக'' ''அறிவானதெய்வமாக'' விளங்குகின்ருன் இறைவன் என்று கூறப்படுகிறதல்லவா? இதிலிருந்து நம் எண்ணங்கள் உண்மைகளை அறியும் ஞானம் இவையனைத்தும் அவனது திருவுளத்தில், அறிவில், எழும் நிகழ்ச்சிகளின் கூறுபாடுகளேயாம் என்பதுவிளங்கும். அவன் நினைக்கின்ருன் அதனுல்நாம்நினைக்கச்செய்யப்படுகின்ருேம்; எண்ணங்கள் நம்மில் எழுகின்றன. அவனது சித்தம் எப் படியோ அவ்வண்ணம் நம் சித்தத்தில் ஸம்ஸ்காரங்கள் படிந்து உரியகாலத்தில் விகசித முறுகின்றன. அலகிலா

விளையாட்டுடைய அவனது பர ஞானத்தின் ஒரு கூறுபாடே அவ்வப்போது நம்மறிவில் உதித்து இதுவரை கண்டு, கேட்டு அநுபவியாத புது ஞானங்களாக உதிக்கின்றன. இவற்றை யே Intutional Knowledge, Divine Knowledge என்கிறோம். இவை நேரே இறைவனது அறிவினின்று நம்முள் விகசிப்பதால் உண்மையாகவே விளங்குகின்றன. இப்படி உண்மையறிவு பரஞானம், உதிப்பதற்கான சாதனத்தையே யோக நெறி யில் கூறப்பட்டுள்ளது. ''பொய்யும் அகலாத மெய்யை வளராவி உய்யும் வகை யோகத்தணுகாத'' வாழ்வை மாற் றியமைக்க வேண்டுமென்கின்றது திருப்புகழ்.

இனி இந்த Intutional, Divine Knowledge அறிவை எப்படி உதிக்கச் செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம். இஃது நம்மறிவு இறையறிவோடு தொடர்பு கொள்ளும் போது ஏற்படக்கூடும் என்று பார்த்தோம். இப்படி இறையறி வோடு தொடர்பு கொள்வதற்குப் பிற லௌகிக ஞானம் அதில் தோன்ற வண்ணம் இருக்க வேண்டும். இஃது சித்தம் ஒடுங்கி மனம் லௌகிகத்தினின்று விடு பட்டு உள்ளக் கணேக்கிக் குவித்து நின்றல் கூடும்.

இதனையே 'உள்ளக்கணேக்கி அறிவூற உள்ளக்கணேக்க அருள்வாயே' என்கிறது திருப்புகழ். இப்படி மனதை பயிற் றுவித்து சித்தமவிழநித்தத்வம் பெறப்பகர்ந்த உண்மை ஞானத்தையே உபதேச மென்றும் கூறுகிறது மறைநூல். ஆகவே இவ்வழியில் நாமும் இறை ஞானத்தை உண்மை ஞானத்தைப் பெற்றுய்வோமாக.



# க்ஷீர் பவானி

(ஹிந்தி ஆசிரியர்-ஸ்ரீ சமன்லால் ஸப்ரூ-தமிழ்ப்படுத்தியவர்-ஸ்ரீ மாதாம்பாஜீ)

பாரத நாட்டில் எத்தனை தீர்த்தங்கள் இருக்கின்றனவோ அவை யாவும் காக்ஷ்மீர் பிரதேசத்தில் இருக்கின்றன என்று விதஸ்தா மகாத்மியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. காஷ்மீரின் பூகோள நிலையே மிக அற்புதமானது. நாலா பக்கங்களிலும் பனி மறைத்திருக்கும் மலைத் தொடர்கள், நதிகள், வாய்க்கால்கள், நீர் ஊற்றுக்கள் ஏரிகள் ஆகியவைகளாலும், மிக அழகான பள்ளத்தாக்குகளாலும், வனங்களாலும் நிறைந்து விளங்கும் இந்தக் காஷ்மீர் பிரதேசம் பழையகாலத்தில் ''ரிஷி வனம்'' என்று அழைக்கப்பட்டு வந்தது. அத்யாத்ம நிலையில் சிறந்த போற்றத் தக்க அநேக மஹாத்மாக்களும், தேவிகளும் இங்கு இருந்திருக்கின்றனர். அதே போன்றே உலகப் பிரசித்தி பெற்று விளங்கும் பாரதத்தின் சிகரமாகிய, மகிழ்ச்சி யளிக்கக்கூடிய காக்ஷ்மீரத்தில் க்ஷீர் பவானியின் தீர்த்தம் ஸ்ரீ நகரிலிருந்து பதினுன்கு மைல் தூரத்தில் சிந்து நதி பள்ளத்தாக்கில் இருக்கிறது.

க்ஷீர் பவானி போவதற்கு ஸ்ரீ நகரிலிருந்து இரண்டு முக்கிய வழிகள் இருக்கின்றன. ஒன்று தரைமார்க்கம், மற்றொன்று விதஸ்தா நதி மார்க்கம். தரை மார்க்கத்தில் முக்கியமான வழி விசாரநாக் ஸோவுர் கிராமம், பியிஹாமா தோதர்ஹாமா, ஆகியவைகளின் வழியாக துல்முல் போகிறார்கள். துல்முல் என்பது க்ஷீர் பவானி தீர்த்தம் இருக்கும் கிராமம்.

படகின் மூலமாகவும்ஸ்ரீ நகரத்திலிருந்து க்ஷீர் பவானி போவதற்கு வழி இருக்கிறது. இந்த மார்க்கம் மிகவும் ரம்மியமானது. ஸ்ரீ நகரிலிருந்து புறப்பட்டு சாதிபுரம் அடைந்து (இங்கு விதஸ்தா நதியும், சிந்து நதியும் ஒன்று சேருகின்றன.) சிந்து நதியைக் கடந்து துல்முல் கிராமத்தை

அடையலாம். இவ்வழியாகச் செல்பவர்கள் பெரும்பாலும் பெரிய படகுகளில் செல்கின்றனர். இப்படகில் உட்காரு வதற்கும், படுப்பதற்கும், சமையல் செய்வதற்கும் வசதி கள் இருக்கின்றன. படகோட்டியின் குடும்பமும் இதிலேயே வசிக்கிறது.

சிரத்தையுள்ள பக்தர்வேருெரு வழியைப் பின் பற்று கின்றனர். அவர்கள் ஸ்ரீ நகரத்திலிருந்து நர்வரா அல்லது சோவரா என்ற கிராமம் வரை கால் நடையாகச் சென்று அங்கு படகேறி ஆஞ்சார் என்ற ஏரியைக்கடந்து 'காடுர்' என்ற கிராமத்தை அடைகின்றனர். காடுரிலிருந்து கால் நடையாகச் சென்று வயல்களின் மார்க்கமாக துல்முல் கிரா மத்தை அடைகின்ருர்கள். இவ்வழியாகச் செல்ல நான்கு ஐந்து மணி நேரமாகின்றது. பெரிய படகின் மூலமாக விதஸ்தா சிந்து நதிகளைக் கடந்து செல்வதால் ஏறக்குறைய ஒரு நாளாகிறது. பிரயாணிகளுக்கு பஸ் மூலமாகச் செல் வதில் அதிக நன்மை இருக்கிறது.

க்ஷீர் பவானியின் ரம்மியமான தீர்த்தம், இயற்கை அன்னையின் மடியிலிருக்கும் அற்புதமானதும், கவர்ச்சிமிக்க துமான ஓர் இடம். இங்கிருந்து மூன்று, நான்கு மைல் தூரத்தில் மானச-பல் என்ற அழகான ஏரி ஒன்று இருக் கிறது. சிந்து பள்ளத்தாக்கில் இன்னும் அநேக ரமணீய மான இடங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி இச் சிறு அளவில் வர்ணிக்க இயலாது.

ஸ்ரீ ஜே. கிருஷ்ண மூர்த்தி என்பவர் தன் ''ஸ்ரீ குருதே வரின்சரணங்களில்'' என்ற புத்தகத்தில் சாதன-சதுஷ்டயத் தைப் பற்றி வர்ணித்திருக்கிருர். அவைகளாவன: 1. விவேகம் 2. வைராக்கியம் 3. சதாசாரம் 4. அன்பு அதாவது முமுக்ஷுத்வம். இந்த நான்கும் அத்யாத்ம வழியில் செல் லுகின்ற சாதகர்களுக்கு முக்கியமானது. க்ஷீர் பவானி போ கும் பொழுதுகூட மேற் சொன்ன நான்கு இடங்களில் அடையாளங்கள் இருக்கின்றன. இந்த ரகசியத்தைக் காலஞ்

சென்ற 'ஆப்தாப் கௌல்ஜீ நிகமாத்' என்பவர் 'ததியா ஸோடிஸ்ட்' என்ற பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். மேற்கண்ட இவ்விரண்டிற்கும் ஒற்றுமைத் தன்மை இருப்பது மிகவும் ஆச்சரியமானது. ஸ்ரீநகரிலிருந்து போகும் பொழுது முதன் முதலில் 'விசாரநாக்' என்ற தீர்த்தம் இருக்கின்றது. விசாரம் என்பது விவேகம் என்பதும் ஒரே பொருளுள்ள சொல். இதன் பிறகு த்யுகல் பால் (கொழுந்து விட்டெரியும் ஜ்வாலையின் மலை) என்ற மலையும்,காவஜ் நார் (எரிநிலம்) 'அமர் ஹோர்' அதாவது 'மரணமற்றவையின் படிகள்' என்ற இடம் வருகிறது. மேலே சொல்லப் பெற்ற மூன்றுபடிகளும் வைராக்கியத்தை உண்டுபண்ணுகின்றவைகள். மூன்றாவதாக 'ஆஞ்சார்' என்ற அருவி வருகிறது. இம்மூன்று இடங்களைக் கடந்து சென்று நாம் விரும்பிய ஜகதம்பிகை க்ஷீர்பவானியை அடைகிறோம். மேலும், அன்பின் (முமுக்ஷு) தன்மையை அடைகிறோம். மேற்சொன்ன வழியாகத்தான் பெரும்பாலும் சிரத்தையுள்ளபக்தர்கள் செல்லுகின்றார்கள்

ப்ருங்கேச சம்ஹிதாவில் 'ராக்ஞா ப்ராதுர்பாவ்' என்ற அத்தியாயத்தில் இத்தீர்த்தத்தைப் பற்றி வர்ணிக்கப் பட்டிருக்கிறது. இலங்கையின் அதிபதியான இராவணன் அபூர்வ சக்தியைப் பெறுவதற்காக மஹா ராக்ஞா பகவதியை உபாசித்தான். பகவதியானவர் சந்தோஷமடைந்து இராவணனுக்கு வரம் கொடுத்தார்.

வரம் பெற்ற இராவணன் சீக்கிரமாகவே பெருத்த சுகபோகியாகிவிட்டான். சீதையைத் திருடிச் சென்று பகவான் ராமபிரபுவுடன் சண்டை செய்யத் தயாரானான். இராவணனின் இந்த தீய செய்கையினால் கோபமடைந்த தேவி 360 நாகங்களுடன் என்னைக் காஷ்மீர் எடுத்துச் செல் என்று ஹனுமானுக்குக் கட்டளையிட்டார். ஹனுமான் காஷ்மீர் பள்ளத்தாக்கின் வடக்கில் துல்முல் கிராமத்தில் தேவியை ஸ்தாபித்தார். இங்கே தேவி, க்ஷீர் பவானி அல்லது பகவதி ராக்ஞா என்ற பெயருடன் பிரசித்தமானார்.

தேவிக்கு நைவேத்யம் இனிப்புப் பண்டங்கள், பால் ஆகிய வை. ராவணனின் தந்தை புலஸ்திய ரிஷி காஷ்மீரில் வசித் தார் என்று சொல்லப்படுகிறது.

இப் பிரதேசம் முழுவதிலும் பழைய காலத்தில் சேறு கத்தான் இருந்தது. இது சிந்து நதியின் வெள்ளத்தோடு வந்த மண்ணினுல் ஆனது. ஆகையினுல் இக்கிராமத்திற்கு துல்முல் அதாவது பருத்தியைப்போன்று மிருதுவான பூமி என்ற பெயர் ஏற்பட்டது என்று பண்டிட் சந்த்ஜீ கௌல் என்பவர் சொல்லுகிறுர்.

ராஜ தரங்கிணியில் ராஜா ஜயா பீடரின் (850-888 கி. பி.) காலத்தில் துல்முல் கிராமத்தின் பிராமணர்களுக்கு ஏற்பட்ட தொல்லேகளேப்பற்றி எழுதியுள்ளது. மேற் சொன்ன பிராமணர்களின் நிலம் பிடுங்கிக்கொள்ளப் பெற் றது. பிராமணர்கள் அரசனே சந்திக்கச் சென்றபோது தர்பாரிகளால் தடுக்கப்பெற்றனர். இந்த அவமானத்தால் துக்கமடைந்த பதிஞெரு பிராமணர்கள் சிந்துநதி வாய்க் காலில் விழுந்து ராஜாவிற்கு தற்கொலேயின் பாவத்தைச் சுமத்த நினேத்தனர். இதனுல் அரசன் தன் செய்கையால் கழிவிரக்கங்கொள்ள நேர்ந்தது. பின்பு ஒருமுறை அவன் சபையோர்கள் நிறைந்துள்ள சபையில் மேற்சொன்ன பிரா மணர்களே நோக்கி பரிகாசமாக ''நீங்கள் விஸ்வாமித்திர ரா? அல்லது வசிஸ்டரா? என்னேக் கெடுக்க உங்களால் முடியுமா? என்று கர்வமாகச் சொன்னுன். இதைக்கேட்ட இஷலா என்ற பிராமணரின் பிரஹ்மதேஜஸ் வெளிப்பட் டது. உடனே அவர் அரசனே சபித்துவிட்டார். பிராமண ரின் சாபத்தால் அரசன் மேல் ஒரு தங்கத்தூண் விழுந்து விட்டது. அதனுல் அரசன் மாண்டான்.

அநேக நூற்றுண்டுகளுக்கு முன் காஷ்மீர் பிரதேசத்தில் வெள்ளம் வந்து துல்முல் கிராமம் முழுவதும் ஜலமாகி விட் டது. ஜலப்பிரளயத்தால் மஹா ராக்ஞீ (க்ஷீர் – பவானி) தீர்த்தம் இருந்த இடம் தெரியாமற் போயிற்று.

(தொடரும்)

# இயற்கையே சோதிடம்

(ச. இ. அப்புத்துரை சோதிடன் - வெள்ளவத்தை)

## பாடம்: 12

## மோட்ஷம் விரயம்

சோதிடத்தில் 12 நிமிடம் விரயம் மோட்சத்தானமாகும். இதற்கு சயன சுகபோகம் கிர்த்திஸ்தான மெனப் பல பேர்களுண்டு.

12ம் வீட்டதிபன் 1, 4, 7, 10ம் வீடுகளில் கேந்திரம் பெற்றிருந்தாலும், 1, 5, 9ம் வீடுகளில் திரிகோணங்களிலிருந்தாலும் பெருமனை மாட கூடங்களில் வசித்தலும், தான தரும பரோபகாரர்களாகவும், தனவந்தர்களாகவும், ஆலயம் பள்ளிக்கூடங்களின் தர்மகர்த்தாக்களாகவும் இருப்பார்கள். 12ம் வீட்டதிபனைச் சுபக்கிரகங்கள் கூடினாலும் பார்த்தாலும் மேல் காட்டிய பலன்களைக் கொடுக்கும். 12ம் வீட்டதிபன் உச்சம் பெற்றாலும் மேல் காட்டிய பலனைக் கொடுப்பதோடு பிறநாடுகளிலும் உன்னத பதவி பட்டம் பெருமையான வாழ்வுகளைக் கொடுக்கும். 12ம் வீட்டதிபன் 6, 8, 12ம் வீடுகளில் இருந்தாலும் நீச அஸ்தமனங்களில் இருந்தாலும், மத்திமமான கீர்த்தி, பணமுடை அடிமைவேலைகளில் கட்டுண்டு நிற்றல், சிறைச்சாலை, நோய், கடன், பகை முதலிய வாதுவழக்குகளிலுமிருப்பார்கள். 12ம் வீட்டதிபன் நீசமாயும்நீசபங்கராஜயோகம் பெற்றிருந்தால், தன் நாடோ பிறர் நாட்டிலோ கட்டளையிட்டுத் தேசாதிபதியாயும் பிற நாட்டார் புகழும்படியாய் வாழ்வார்கள். நீசத்தானத்து, ஆட்சிக் கிரகமும், அந்த ராசியின் உச்சக் கிரகமும், சந்திரனுக்கு 1, 4, 7, 10ம் வீடுகளில் இருந்தால் நீசபங்கராஜயோகமாம். இப்பலன்கள் பெண், மண், பொன்னை விரும்பும் மக்கட்குரியது.

நாம் ஏன் பிறந்தோம். கடவுளை வணங்கி முத்தியின் பம் பெறும் பொருட்டேயாம் என்பது

—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வாக்கு.

## திருக்கயிலாயம் இமையம்

நாங்கள் மோட்ஷம் என்றதும் திருக்கயிலாயமும் இமையமும் இரண்டும் அகக்கண்ணில் தென்படுகின்றன! பிரமபுத்திரா சிந்து கங்கை இவை பலப் பல கோடி மக்கட்கும் எழுவகை உயிர் இனங்கட்கும் உதவியாயிருக்கின்ற இமைய வல்லியின் சிறப்பென்னே? இமையக் காற்றிலே இறை ஒளி வீசுகின்றன. இமையச் சேர்க்கையின்றியமையாதது. தத்துவத்திற்கு இமையம் இமையத்திலும் பெரிதொன்று இவ்வுலகிலில்லை. இமையம் மூன்று கூறுகளையுடையது. பசுங்காடு, கரும்பாறை, வெண்பனி என்பன. இமையத்தின் உயரம் 29000 அடி. ஒன்றிலிருந்து 8000 அடிவரை பசுங்காடு. 8000 முதல் 10000 அடிவரை கரும்பாறை. மிகுதி வெண்பனிக் கூடல். 10000 அடி முதல் 14000 அடி வரை காற்றருகுவதைக் காணலாம். இதன்மேல் போக வேண்டின் காற்று நிரப்பிய பைகளின் உதவியோடு போவார்கள். இதனல் காற்றருகுமலை என்ற பெயரும் இமையத்திற்குண்டு காற்றில்லாப் பகுதியேஇதைவெள்ளிமலை என்பர். கயிலாயம் 20000அடிஉயரத்தில்கௌரிசங்கர்திருவுருவம்புலப்படும்.அதுவே சீர்கண்ட சிவம் என்க. பெண், ஆண், குழந்தை இவை முறையே சத்து சித்து ஆனந்தமாகிறது. மகேஸ்வரர் சதாசிவனர் தற்பரசிவமே, பரம்பொருளாவார். இமையத்தின் பசுமை எங்கள் மாயை. கருமை ஆணவம். வெண்மை ஒளி புலனுகும். கயிலாயம் பரவெளியேயாம். இதுவே நிர்வாணம் சத்திநிபாதம் என்று சைவ நூல்கள் கூறுகின்றன.

## சகுண நிர்குண பக்தி

கங்கை ஓடும் எல்லா இடங்களுமே பொதுவாகப் புனிதமானவைதாம். ஆனல் பிரமபுத்திரா, ஹரித்துவாரம்,

காசி, பிரயாகை முதலிய இடங்கள் அதிக புனிதமானவை. அவை உலகம் முழுவதையுமே பரிசுத்தமாக்கிவிட்டன. பகவத்கீதை ஆரம்ப முதல் முடிவு வரை முழுமையுமே புனிதமானது. ஆனல் இடையிலுள்ள சில அத்தியாயங்கள், புண்ணியத்தலங்களாகிவிட்டன. இன்று இப்பாடமே 12ம் பாடம் பகவத்கீதையில் இது 12ம் அத்தியாயமே; பகவானே இதை 'அமுததாரை' என்று அழைக்கிருர். (யேது தர்ம் யாம் ருதமிதம் யதோக்தம் பர்யுபாஸதே.) இது இருபது சுலோகங்களைக் கொண்ட சிறிய அத்தியாயம். ஆனல் அமுத ஒழுக்காய் அமைந்தது. இது அமுதத்தைப் போல் இனியது. புத்துயிர் அளிப்பது. இவ்வத்தியாயத்தில் பகவானே திருவாய் மலர்ந்து பக்திரச தத்துவ மகிமையைப் பாடியருளியிருக்கின்ருர்.

அர்ஜுனனின் கேள்வி, சகுண உபாசகனே, நிர்குண உபாசகனே தங்கட்குப் பிரியமானவர்கள்? பகவான் இதற்கு என்ன பதில் அளிப்பார்? ஒரு தாயின் இரு பிள்ளைகளில் ஒரு பிள்ளையைத் தா என்று கேட்டால் கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஆகவே மூத்த பிள்ளை தன் காரியங்களைப் பார்க்கும் தன்மை உடையவன். இளையவனே தாய் சிறிது பிரிந்தாலும் அழத் தொடங்குவான். அவனல் தாயைப் பிரிந்தால் அவனுக்கு உலகமே சூனியமாய்விடும். ஆகவே சகுண பக்திமார்க்கம், நிர்குணபக்தி ஞானமார்க்கம். சகுண உபாசகன், கிரியை மூலமாக தன் உடல், பொருள், ஆவி, மூன்றையும் சுதர்மவழியில் முழுமனத்துடன் பகவானுக்கே தான் செய்யும் கர்மவிகர்மங்களைச் செய்து விடுவான். இதில் அபாயமில்லை. நிர்க்குண உபாசகனே ஞானி. பொறி புலன்களை அடக்கியாள்பவன், வைராக்கிய பக்தி இதில் அபாயமிருப்பினும் தன்னைத் தியாகம் செய்வதைவிட பகவானை மறக்காது திடசித்தத்தினல் பக்தி செலுத்தி இடைவிடா முயற்சியிலிருக்கின்ருன். இது சந்நியாசம். சுகுண பக்தன் புலன்களின் மூலமாக ஆண்டவனுக்குச் சேவை செய்கிருன். நிர்குண பக்தனே மனத்தினல் உலக நன்மைக்கானவற்றைச் சிந்திக்கின்ருன். முதலவன் வெளிச் சேவையில்

ஆழ்ந்திருப்பவனுகக் காணப்படுகிருன்; மற்றவனே பிறர் பார்க்கும்படி நேரிடையான சேவை எதுவும் செய்யக்கா ணும். ஆனுல் அவனது உள் மனமோ மாபெரும் சேவை நடந்த வண்ணமிருக்கின்றது. வெளிப் பார்வையில் வெவ் வேருய்த் தோற்றினுலும் உள்ளே இவ்விரு பக்தர்களும் ஒரே தன்மையரே. (பகவானுக்கு)

இராமன் வனவாசம் போகும்போது, இலட்சுமணு, நான் காட்டிற்குப் போகின்றேன். தந்தை இவ்வாறு கட் டளை யிட்டிருக்கிருர். நீ வீட்டிலே இரு. என்னுடன் வந்து தாய் தந்தைமாருக்கு மேலும் துன்பம் வளர விடாது பார், எல்லோருக்கும் பணிபுரிவாயாக என்ருர். லட்சுமணன் ராமன் கூறிய அனைத்தையும் ஒரே சொல்லில் தூக்கி எறிந்து விட்டான். இந்த அரசாட்சியின் சுமையை என்னுல் தாங்க முடியாது. உங்களுக்குப் பிரதிநிதியாய் இருக்கும் சக்தி எனக்கில்லையே! நான் ஒன்று மறியாச்சின்னப்பிள்ளை யல்ல வா? அன்னப்பட்சியால் மேருமலையைத் தூக்க முடியுமா? அண்ணு, நானே இன்றுவரை உங்கள் அன்பிலே ஆதரவிலே வளர்ந்தவன், நீங்கள் இந்த இராச நீதியை பரதனுக்கே பொறுப்புக் கொடுங்கள். என்று மேலே பேசாது நின்ருன். நீரைவிட்டு மீனுல் வாழமுடியாதது போல் ராமனைவிட்டு லட்சுமணனுல் வாழ முடியாது. இது அன்பு மயம் இதுவே சகுணபக்தி.

நிர்குணபக்தியின் தன்மையையும் காண்போம். பரதன் நிர்குணபக்தி புரிந்தவன், இராமன் காட்டுக்குப் போன பொழுது பரதன் அயோத்தியிலில்லை. பரதன் வந்த பொ ழுது தசரதர் காலமாகியிருந்தார். குரு வசிஸ்டர் 'நீ அர சாட்சியை நடத்து' என்று அவனுக்குப் புத்தி சொன்னுர். ஆனுல் பரதன், நான் இராமனைப் பார்க்க வேண்டுமே என் ருன். இருந்தும் தமயனின் கட்டளையையும் ஏற்று இராட் சிய பாரத்தையும் செய்து வந்தான். இந்த ராட்சியம் இரா மனுடையது; இதன் நிர்வாகத்தைச் செய்துவருவது இரா மன் காரியத்தைச் செய்தலேயாகும், என்பது அவன் பா

வனை. சொத்தெல்லாம் எசமானுடையது அதை நிர்வகித்து நடத்தல் மட்டும் தன் கடமை. இலட்சுமணனைப்போல் இவனுல் தட்டிக்கழிக்க முடியாது போயிற்று. இல்லையேல் (நிர்குண) அந்தப் பக்தியினுல் பயனென்ன?

இராட்சிய நிர்வாகத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும், செய்துவிட்டுப் பரதன் இராமனைச் சந்திக்கக் காட்டிற்கு வந்து, அண்ணு, இது உங்கள் இராச்சியம். நீங்களே.... என்று சொல்வதற்குள், இராமன் பரதனிடம் 'பரதா நீயே இராச்சியத்தை ஆளுவாய்' என்று ராமன் சொல்கிருன். பரதன் சங்கோசத்தால் அப்படியே நின்று விடுகிருன். இராமன் எதைச் சொன்னுலும் கேட்டு நடப்பதே நிர்குணபக்திமானின் கடமையாகும்.

# சிவோகம் பாவனை

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு; உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாகநினை. அதைவிடவேறில்லை என்று நினை. இருக்கும் போதும், நிற்கும் போதும், நடக்கும் போதும், கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும், தசையிலும், இரத்தத்திலும், தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிருரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிருனே அவன் அதுவாகிருன். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனுகவே காணப்படும்.

—யோகர் சுவாமிகள்

# என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதன்!

நா. முத்தையா

ஈழம் ஒரு புண்ணிய பூமி. நல்லோர்கள் வாழ்ந்தமையால் புண்ணிய பூமியாந் தகைமையைப் பெற்றது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம், சிவனடிபாதம் போன்ற தலங்களுடைமையினுலே இது தெய்வ பூமியும் ஆகின்றது.

கடையிற் சுவாமிகளுடைய காலந்தொட்டு ஈழத்தில் குருபரம்பரை ஒன்று இன்றுவரை பாதுகாக்கப் பட்டு வந்துள்ளதை யாரும் அறிவர். அப்பரம்பரையிலே வந்தவர்தான் எங்கள் குருநாதன் யோகர் சுவாமிகள்.

சுவாமிகளின் பிறப்பிடம் மாவிட்டபுரம். ஆனுலும் கொழும்புத்துறையிலேயே வாசஸ்தலம் ஆயிற்று. மணிவாசகப் பெருமானை சிவபெருமான் வலியவந்து ஆட்கொண்டது போல யோகர் சுவாமிகளையும் செல்லப்பா சுவாமிகள் வலிந்துவந்து ஆட்கொண்டார்கள். பக்குவநிலை வரும்போது குருநாதன் சிஷ்யனைத் தேடி ஓடிவருகின்ருன். பெற்ருர் இட்ட பிள்ளைத் திருநாமமாகிய யோகநாதன் என்பதே யோகர் சுவாமிகள் ஆயிற்று.

தந்தையார் கொழும்புத்துறையைச் சேர்ந்த அம்பலவாணர். தாயார் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சின்னுச்சி அம்மையார். சுவாமிகள் பிறந்தது மாவிட்டபுரமாயினும் வளர்ந்தது கொழும்புத்துறையாகும். அம்பலவாணர் சிவனடிபாதத்தின் அடிவாரத்தில் அமைந்த மஸ்கெலியாவில் வியாபாரத் தொழில் புரிந்து வந்தார்.

தாய் சொல்லைத் தட்டக்கூடாது தம்பி என்று சுவாமிகள் அடிக்கடி கூறுவார்கள். அதற்குதாரணமாகத் தமது இளமைப் பருவத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றைக் கூறுவார்கள். இளமைப்பருவத்தில் ஒருநாள் தாம் உண்ட உண்கலத்துடன் சோற்றைக் கொண்டுபோய் வெளியில் வீசினார்களாம். அப்போது அன்னையார் அவரைப் பார்த்து "உப்பிடிச் செய்கிறாய், நீ பிச்சை எடுத்துத்தான் சீவிப்பாய்" என்று சொன்னார்களாம். அன்னையின் வாயில் வந்தபடியே திருவருட்செயலாகத் தாம்பிச்சைக்காரனாகவே வாழ்ந்து வந்ததாகச் சுவாமிகள் சொல்வார்கள். இதனை மிக்க பெருமையோடு சொல்லி மகிழ்வார்கள். பட்டினத்தடிகளுக்குத் தம்தாயிடம் இருந்த அன்புபோலவே சுவாமிகளுக்கும் இருந்தது என்று சொல்லலாம்.

"அன்னை பிதாவின் அடியிணை வணங்குக"
"அன்னையுந் தந்தையும் ஆன்மாவுக்கில்லை"
"அன்னை பிதாக்குருவாய் ஐயனெனை ஆண்டு கொண்டான்"
"அன்னை பிதாக் குருவாகி ஆண்டு கொண்ட தெய்வம்"
"அம்மையாய் அப்பனாய் ஆதரிக்குந் தெய்வம்"
"இம்மை நற்பயன் எய்துந் திண்ணமே"
"அன்னையினு மன்புடைய ஆசான்"
"உன்னை முழுவதும் ஒப்புக் கொடுத்தால்
அன்னையைப் போலே யாதரிப்பாரே"
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தன்னையும் பிறரையும் தானே காண்க"
"அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்"

என்ற சுவாமிகளின் திருவாக்குகள் வேதவாக்குகளாகும். தாய் தந்தையருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் அன்பு குறைந்து வேற்றுமை மிகுந்துவரும் இந்நாளில் சுவாமிகளின் நற்சிந்தனைகள் அருமருந்து போல்வனவாகும்.

சுவாமிகள் இளமை தொடங்கியே தியானம் பயின்றவர்கள். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற மணிவாசகரின் திருவாக்குச் சுவாமிகளின் உள்ளத்தில் ஆழப்

பதிந்து கிடந்தது. இரவில் தியானத்தில் தன்னிலை மறந்து விடுவார்கள். அத்தகைய தருணங்களில் வாய்விட்டு அழு வார்கள். சுவாமிகள் அழுவதைக் கேட்டு நண்பர்கள் விழித்து ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டால் சுவாமிகள் நான் சுவாமி கும்பிடுகிறேன் என்று சொல்லுவார்.

இத்தகைய சாதனை முதிர்ச்சியினுல் சற்குருநாதர் ஒரு வரைச் சந்திக்கவேண்டும் என்ற அவா எழுந்தது. குருவும் தனது சக்தியைக் கொடுக்கக்கூடிய ஒருசீடனைத் தேடித்திரிந் தார். குரு சாமானியர் அல்ல. கடையிற் சுவாமிகளுடைய சீடன். தன்னை யார் என்றே மற்றையோருக்குக் காட்டிக் கொள்ளாது வாழ்ந்தவர். அவர்தான் செல்லப்பா சுவாமி கள். உலகோர் அவருக்குக் கொடுத்த பட்டம் விசர்ச்செல் லப்பா என்பதாகும்.

யோகர் சுவாமிகள் ஒருநாள் தமது திருக்கூட்டத் தினருடன் நல்லூரை வந்தடைந்தார். நல்லூர்த் தேரடி யில் நின்ற செல்லப்பா சுவாமிகளைப் பார்த்தார், தம் வசம் இழந்தார். திருக்கூட்டத்தைப் பிரிந்து சுவாமிகளைச் சென்று வணங்கினுர். குருநாதர், ''உன்னைத்தான் காத் துக்கொண்டிருக்கிறேன் வா'' என்றுர். இவரது பரவச நிலையைப் பார்த்து தன் வலக்கரத்தால் இவர் உச்சியில் அடித்து தீட்சையும் செய்தருளினுர் குருநாதர்.

சிவபெருமான் மானிட உருத்தாங்கி வந்து மணிவாச கரை ஆட்கொண்டது போலவும். பரமகம்சதேவர் விவே கானந்தரை வீடுதேடிச் சென்று ஆட்கொண்டது போல வும் செல்லப்பா சுவாமிகள் எங்கள் குருநாதனும் யோகர் சுவாமிகளை ஆண்கொண்டருளினுர்கள் இந்த அநுபவத்தை யோகர் சுவாமிகளுடைய திருவாக்காலேயே அறிந்து கொள்ளலாம்.

கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்த மெலாந்தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்

தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடாநீ என்றான் அவன்.

தன்னையறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன் - சந்நிதியில்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடா உள்ளௌன்றான் சிரித்து.

குருவினுடைய தரிசனம், தீட்சையுடன் உபதேசமும் நிகழ்ந்தது. குருந்தமரநீழலிலே சிவபெருமான் மணிவாசகருக்குச் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்தது போல செல்லப்பா சுவாமிகளும் யோகர் சுவாமிகளுக்கு ஐந்து மகா வாக்கியங்களை உபதேசித்து அருளினார்கள்.

சும்மா இரு.
எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம்
முழுதும் உண்மை
ஒரு பொல்லாப்பும் இல்லை

இவை குருநாதரின் மந்திர மொழிகளாகும். இந்த உபதேசத்திற்குள் அடங்காத பொருள் இல்லை. அருணகிரிநாதருக்கு முருகப்பெருமான் செய்த உபதேசத்தை கந்தரனுபூதியில் அருணகிரிநாதர்

"சும்மா இருசொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே"

என்று குறிப்பிடுகின்றார். சும்மா இருத்தல் சுலபமானதல்ல. சாதனைகளுக்குள் எல்லாம் உயர்ந்த சாதனை அதுவேயாகும். சும்மா இருக்கும் சூட்சுமம் அறிந்தவர்களே உண்மையான சிவதொண்டர்கள். செல்லப்பா சுவாமிகளை விசர்ச் செல்லப்பா என்று உலகம் கருதியது போல யோகர் சுவாமிகளையும் சும்மா திரியும் சுவாமி எனக் கருதியது உலகம்.

சும்மா இருந்து அவர் பரப்பிய எண்ண அலைகளினால் இயக்கம் பெற்று ஆயிரக்கணக்கான அடியார்கள், பெரும் பெரும் பதவியாளர்கள், பட்டதாரிகள், வர்த்தகர்கள், அரசியல்வாதிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் எல்லோரும் அவர் பொன்னடியில் சிரம்தாழ்த்தி கைகட்டி. வாய் மூடி நின்று அவர் திரு நோக்கையும் திருவாக்கையும் செயல் படுத்தினார்கள் என்றால் இத்தபோதனரின் திருவருட். சக்தியை விளக்க வேறு எடுத்துக் காட்டுகள் வேண்டுவனவோ?

ஒருநாள் கழனிநிலமானது பக்கத்தில்இருந்த மலையைப் பார்த்துச் சிரித்தது.

''என்ன தம்பி வயலாரே ஏன் சிரிக்கிறீர்கள்'' என்று கேட்டது மலை.

''இல்லையண்ணே, நான் எவ்வளவு பாடுபடுகிறேன்; உழைக்கிறேன்; உபத்திரவப்படுகிறேன்; என் உடலை ஏர் கிழிக்கிறது. எருது மிதிக்கிறது. சேறாகவும் சுரியாகவும் நான் இழைந்து உலகம் வாழ்வதற்குச் சோறு அளிக்கிறேன், என்னால் அல்லவோ எல்லா ஜீவன்களும் உயிர்க்கின்றன? உனக்கென்ன அண்ணே, நீ சும்மா உட்கார்ந்திருக்கிறாய்!'' என்று தற்பெருமையோடு மலையைப் பார்த்து ஏழனப் பேச்சுப் பேசியது கழனிநிலம். மலை சிரித்தது.

''ஏன் அண்ணே சிரிக்கிறாய்?'' என்று கேட்டது கழனி.

''இல்லை தம்பி நீ சொல்வதைக்கேட்டு எனக்கும் உன்னைப் போல் பரந்து நீண்டு கழனியாகிவிட வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால் ஒரேயொரு கவலை. சும்மா உட்கார்ந்திராமல், உன்னைப்போல் நானும் கழனியாகிவிட்டால் மழை முகில்களைக் கவர்ந்திழுப்பது யார்? அவற்றை மழை பொழியும் வண்ணம் குளிர் ஏற்றி வைப்பது யார்? பொழிந்த மழையை ஆறாகவும் நதியாகவும் ஆக்கி களனி விளைவதற்கு நீராக கீழ்நோக்கிப் பாய்ச்சி வழங்குவது யார் என்று தான் கவலைப்படுகிறேன்'' என்றதுமலை.

அப்போதுதான் களனிக்கு மலையின் முக்கியமும் அவசியமும் தேவையும் மேன்மையும் புரியலாயிற்று. சும்மா இருப்பது போல் மலை இருந்தாலும் அது மறைமுகமாகச் செய்யும் சேவை மகத்தானது என்பதைக் களனி உணர்ந்தது; வெட்கித் தலைகுனிந்தது.

இப்படியேதான் யோகியரும் ஞானியரும் சும்மா இருந்தாலும் அவர்கள் மனுக்குலத்திற்கு ஆற்றும் ஞான சேவை மகத்தானது. எங்கள் குருநாதராகிய யோகர் சுவாமிகளும் இவ்வண்ணமே நாம் உய்ய கொழும்புத்துறைக் கொட்டிலிலிருந்தவாறே அரிய பல சேவைகளை ஆற்றி மறைந்துள்ளார்கள். மறைந்தும் மறையாது விளங்கும் இந்த மாமலையை நாம் நினைந்து நினைந்து நெக்குருகி அவர்தம் அருளினைப் பெறுவோமாக.

கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் சுவாமி அவர்கள் இராக்காலத்தில் இருப்பார்கள். அங்கே அடியார்கள், பக்தர்கள், அன்பர்கள் எல்லோரும் தினமும் கூடுவார்கள். வெள்ளிக்கிழமை செவ்வாய்க்கிழமைகளில் கூட்டம் கூடுதலாய் இருக்கும்.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருமந்திரம், பாராயணம் செய்வார்கள். யோகர் சுவாமிகளுக்கு அஞ்சலி செலுத்துவார்கள். வறியவர்களும், தனவந்தர்களும், பக்தர்களும் காலை 5 மணிக்குக் கூடுவார்கள். கற்பூரதீபம் ஏற்றுவார்கள். யோக சிந்தனையில் சுவாமி இருப்பார்கள். அங்கு செல்லும் தாய்மார்களுக்கு ஏற்ற புத்திமதி சொல்லுவார்கள். கதை சொல்லும்பொழுதெல்லாம் சிரித்துக் கொண்டே பகிடியுடன் சொல்லுவார்கள்.

''எல்லோரும் ஒருகுலம், எல்லோரும் ஒரு இனம், எல்லோரும் சமம்'' என்று சொல்லுவார்கள். சிலபல அடியார்களை உங்கள் கடமையைப் போய்ச் செய்யுங்கள் இங்கே ஏன் வருகிறீர்கள். நாங்கள் பிச்சைக்காரர்கள், ''நாம் சும்மா இருக்கிறோம், எங்களைத் தொந்தரவு செய்யாதீர்

கள்'' என்று ஏசிக்கலைப்பார்கள். கர்மவினையால் எங்களுக்கு இப்பிறவி வந்தது. நாம் ஒன்றும் அறியோம். நாம் ஏன் இங்கு பிறந்தோம். இப்பிறவியால் ஒரு பொல்லாப்பும் இல்லை. அதனால் பாதகமும் இல்லை. பிறப்பு வர இருந்தது. அது வந்துவிட்டது. நாங்கள் ஆத்மலாபத்தை நல்லாய்த் தேடிக்கொள்ளலாம்.

சுவாமிகள் ஒரு சமரச ஞானி. எல்லா மத உண்மைகளையும் அறிந்தவர். அறிய விரும்பியவர். அந்தந்தச் சமயத்தவர்களுக்கு அந்தந்தச் சமய வழி அறிந்து போதனை செய்தவர்கள். ஆனால் தான் சிவதொண்டன் என்பதை மறக்கவே இல்லை.

சுவாமிகள் ஒரு ஜீவன் முக்தர். குருபரம் பரையை ஒட்டித் தம்மை யார் என்று காட்டிக்கொள்ளாமலே வாழ்ந்தவர்கள். ''நல்லார் இணக்கமும் நின்பூசை நேயமுமே அல்லாது வேறு நிலை உளதோ'' என்று அடிக்கடி பாடுவார்கள். அதுவே பலருக்கு உபதேசமாகவும் அமைந்தது.

## நான் யார்?

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று நீ ஆத்மா.

ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.

இப்படிக்கு,
அவனே — நானே.

# அக்கமாதேவியின் அநுபவநிலை

(குரு. ஆ. கந்தசாமி ஐயா)

சென்ன மல்லிகார்ச்சுன தேவா!

தாங்கள் இன்று வந்தமைக்கு எனக்குண்டான இன்பத்திற்கு எல்லையே இல்லை. நீங்கள் தரும் இன்பம் உலகில் எவர்க்கும் கிடைக்காத இன்பம். இதில் மூழ்கி நிறைவெய்தினேன். உங்கள் நட்பினைப் பெற அடைந்த வருத்தங்களுக்குத் தக்க பலன் இன்று இந்த சரணர்களின் கூட்டத்தினால் உங்கள் பெறற்கரிய திருவருள் கிடைக்கப் பெற்றேன். எனது வெகு நாளைய கோரிக்கை இன்று நிறைவேறியது. முன்னை நாளின் கனவு இன்றைய நனவாக நிகழ்வுற்றது. என் திரிகரணங்களும் இன்பம் நிறைந்து வழிகின்றது. உங்கள் நாமரூபங்களில் நான் கலந்துவிட்டேன். எனக்கு இனி எந்த ஆசையும் இல்லை. தனு உங்கள் ரூபமான பிறகு நான் யாருக்குப் பணி செய்வேன். மனம் உங்கள் ரூபமான பிறகு நான் யாரை நினைப்பேன். பிராணன் உங்கள் ரூபமான பிறகு நான் யாரை ஆராதனை புரிவேன். அறிவு உங்களில் சுயமான பிறகு நான் யாரை அறிவேன். சென்னமல்லிகார்ச்சுனா! உங்களில் நீயே யாக என்னை மறந்தேனையா என்று தன் உள்ளக்கிடக்கையினை வெளிப்படுத்துகின்றாள்.

மற்றும் இருவரின் நட்பினை உறுதிப்படுத்துகின்றாள். நான் உங்கள் பொருட்டு அன்பு பூண்ட எனக்கு நீங்கள் வெளிப்படாதிருக்க முடியுமா? சேற்றில் மலர்ந்த செந்தாமரையைச் சேற்றினைக் கருதி விரும்பாதொழிவரோ? அதுபோல என் இதய தாமரை மலர்ந்து உம்மை ஏற்றுக்கொண்ட எனக்கு அருள் செய்ய மாட்டீர் என்று சொல்லத்தான் ஆகுமா? ஆகாது. என்றும் ஆகாது. காந்தம் இரும்பினை ஈர்ப்பதுபோல் இனம் இனத்தைச் சேர்வதுபோல் அன்பினால் அருள் பிறக்கிறது. நீங்கள் எனக்காக அருள் செய்

தீர் நம் இருவரின் இதயங்கள் உண்மையாகவே கலந்து விட்டன. தேவா! நான் உம்மை நேசித்தேன். நீர் என்னை நேசித்தீர். நீர் என்னை அகலாதிருப்பீர். நான் உங்களை அகலாதிருப்பேன். உங்கட்கும் எனக்கும் இனி வேருேர்தல முண்டோ? நீர் கருணை வடிவென்பது நான் உணர்ந்தேன். நீர் இருத்திய பெருநிலையில் இருக்கின்றவளானேன். நீரே வல்லவர் சென்னமல்லிகார்ச்சுன என்று தன்மயமானுள்.

---

# வசவண்ணர் வழி

நந்தீசர் அவதாரமாக இப்பூவுலகில் வந்தவதரித்த நம் வசவண்ண வள்ளல் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் விச்சலன் என்னும் சமண மன்னனின் ஆட்சிக்குட்பட்ட கல்யாண நகரைச் சார்ந்த இங்குளாபுரியில் அறநெறி வழுவாத மண்டிகை மகாதேவ ஐயரும் அவரது மனைவி கற்பு நிலை தவருத மாதாம்பிகையும் நந்தி எம்பெருமானுக்கு நாற்பத்தெட்டுப் பிரதோசம் தோறும் தவருது வழிபாடாற்றிய பயனுல் அந்நந்தியின் அம்சமே அவர்களுக்குக் குழந்தையாகப் பிறந்து கூடலசங்மேஸ்வரரால் சிவலிங்கந்தரிக்கப் பெற்று பிராமணீய ஆச்சாரமாகிய உபநயனம் என்னும் பூணூல் தரிப்பதை மறுத்து தமது சற்குருநாதராகிய சங்கமேஸ்வரரை யடுத்து சகல கலைகளையும் சங்கையற உணர்ந்து சந்நிதானம் தேடிவரும் அடியவர்கட்கு அருள் நெறியுணர்த்தியும் குருதேவரின் ஆணைப்படி பல தேவராகிய தனது மாமாவின் மகள் கங்காம்பிகையைத் திருமணம் செய்து அறவாழ்க்கை வாழ்ந்து தனது மாமா ஏற்றிருந்த தண்டநாயகர் என்னும் தலைமை அமைச்சர் பதவியேற்று வீரசைவ சங்கம அடியவர்களுக்கு வேண்டிய உதவிகள் பல புரிந்து, தனது இஷ்டலிங்கத்தின் திருவருளால் அரிசன் அந்தணன் என்ற சாதிவேற்றுமையும், ஆண் பெண் என்ற

பால்வேற்றுமையுங் கருதாது அனைவரும் சிவபூசைக்குரிய வர்களே என்று சிவலிங்கதாரணத்தால் சிறப்பித்து சம உரிமையும் கொடுத்து ஆதரித்ததோடு ஒவ்வொரு ஊரிலும் உள்ள வீரசைவ சமூகத்தார் அஷ்டாவரண பஞ்சாச்சார சீலத்தினின்றும் வழுவாமலும் சத்தியம் சகோதரத்துவம் சமத்துவம் தன்னலமற்றசேவை சீவகாருணியம் ஆகிய நன் னெறியினின்றும் தவறி அதர்ம வழியிற் செல்வோர்களை மடாதிகாரிகளாகிய குருமார்களால் தர்மோபதேசம் செய் யப்பெற்றும் மீறி நடந்து கொள்பவர்களை நீங்கள் திருந் தும்வரை உண்ணுவிரதமிருந்து உங்கள் வாழ்க்கை நலத் துக்காக எமது உயிரையும் தியாகம் செய்வோம் என்று சத்தியாக்கிரகம் செய்வார்கள். அதை உணர்ந்த வீரசை வர்கள் உடன் திருந்தி வீரசைவ நெறியிற் தீவிர ஆச்சார சீலர்களாகி விடுவார்கள். வசவண்ணரின் கொள்கையில் சந்நியாசம் பெற்றுத்தானுகவேண்டும் என்பதில்லை. இல்லற வாழ்க்கையில் நீதிவழுவா நெறிமுறையில் வாழவேண்டு மென்றும் பிறரை ஏமாற்றும் சோம்பேறிகளாய் காலத் தைக் கழிக்காமல் சீவ இம்சையற்ற எத்தொழிலையும் இயற் றும் கர்ம வீரர்களாய் வாழ்ந்து இமைப்பொழுதும் தன் நெஞ்சகத்து இறைவனை மறவாத பக்தியோகத்தையுடைய வர்களாய் அமைதியுடன் வாழவேண்டுமென்றும் வசவண்ண வள்ளல் வற்புறுத்தினுர். எக்காரணத்தைக் கொண்டும் வீர சைவர்கள் குருலிங்க சங்கமபக்தியில் பேத புத்தியடையக் கூடாதென்றருளினுர். நம் வீரசைவ சமூகம் முன்னேற்ற மடையத் தமது உயிரையும் தியாகம் செய்திருக்கிறுர். தொன்மை காலந்தொட்டு நமது பாரதம் முழுவதும் பரவி யிருந்து மங்கிக்கிடந்த வீரசைவ சமயத்தை அதன் மாசு நீக்கி மீண்டும் மறுமலர்ச்சியடையும்படி செய்தார். இன் றும் வீரசைவ சமூகத்தவர்கள் நடத்தும் மோட்சதீபங்களி லே வசவண்ணர் பாதம் பிடித்து கைலாயஞ்சேர என்று பக ரப்படுவதை அறிகின்றேம். வசவண்ணரின் வழியாகிய அதே கொள்கையைத்தான் மகாத்மா காந்தியடிகளும் பின் பற்றி சுயராச்சியத்தை யடைந்தார்கள் என்பதை உணர்ந்து அவரது வழிபற்றி மெய்ப்பயன் பெறுவோமாக.

—குரு. ஆ. கந்தசாமி ஐயா

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Reistered at the G. P. O. as a Newspaper M. L. 59/300.

# சந்தா நேயர்களின் முக்கிய கவனத்திற்கு!

1. 23-வது ஆண்டுச் சந்தா இம்மாதம் தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்பெறும். ஆதலால் சந்தா நேயர்கள் தமது சந்தாவை உடன் அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

2. சந்தா அனுப்புவோரும் விலாசமாற்றம் செய்வோரும் தத்தம் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட விரும்புகின்றோம். அங்ஙனம் குறிப்பிடுவதனால் காரியாலய வேலை இலகுவாகின்றது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

3. ஆயுள் சந்தாதாரராகச் சேர விரும்புவோர் நூறு ரூபாய் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். ஆயுள் சந்தாதாரராகச் சேருவதனால் சோதியின் வளர்ச்சிக்கு உதவி புரிந்தவர்களாவீர்கள்.

4. தங்கள் நண்பர்களில் ஒருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து உதவினால் சோதியின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்தவர்கள் ஆவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

### நாவலப்பிட்டி, (இலங்கை.)

ச்சிடுவிப்போர்:– ஆத்மஜோதி நிலையத்தினர்.

ச்சிடுவோர்:– ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.

வெளியிட்ட திகதி:– 15-3-71.